1978 செப்டம்பர் 9]

சேரன்மாதேவி பேருந்து நிலையம்.

*வினா எண். 111— திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி பஞ்சாயத்து பேருந்து நிலையம் புயலால் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பேருந்து நிலையத்தை சீரமைக்க மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பேருந்து நிலையம் புயலால் பாதிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

காரைக்குடி நகராட்சி அலுவலகக் கட்டிடம்.

*வினா எண். 112— திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் காரைக்குடி நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கு அறிஞர் அண்ணாவால் அடிக்கல் நாட்டப்பட்டும் இதுவரை நகராட்சி அலுவலகம் கட்டப்படாததன் காரணம் என்ன ?

(ஆ) அதனைக் கட்டுவதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அண்ணா அவர்கள் பெயர் பொறிக்கப்பட்ட அவரால் திறந்து வைக்கப்பட்ட சலவைக்கல் இப்போது எங்கு உள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) நிதிப் பற்றுக்குறையால் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேவையான நிதி திரட்டவும் அரசிடம் கடன் பெறவும் ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(இ) இந்த சலவைக்கல் பாதுகாப்பாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணாவால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்த நகராட்சிக் கட்டிடம் கிட்டத்தட்ட 9 ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. அதை இந்த அரசாவது கடன் கொடுத்து அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தற்போது ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, அந்த அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்னை மாநகராட்சியுடன் ஊராட்சிகள் இணைப்பு.

* வினா எண். 113 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையைச் சுற்றியுள்ள ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைக்கும் திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடமிருந்து எதிர்ப்பு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கானகம்-தரமணி, விருகம்பாக்கம், சாலிக் கிராமம், எருக்கஞ்சேரி ஆகிய நான்கு பேரூராட்சிகள் எதிர்ப்புகள் தெரிவித்துள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 4 ஊராட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதன்மீது அரசு என்ன மேல் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ? அதைப் போலவே சென்னை நகராட்சியை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் பல பகுதிகளைச் சேர்ப்பதாகத் தெரிகிறது. அப்படி சேர்க்கப்படுவதன் அடிப்படை நோக்கத்தினை அரசு அறிவிக்க இயலுமா ? எந்தெந்தப் பகுதிகள், விரிவு படுத்தப்படுகிற பகுதிகளாக ஆக்கப்படுகிற நேரத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்தப் பேரூராட்சிகளின் எதிர்ப்பை நிராகரித்து 29—5—1978 ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை (பல்வகை) 790-ல் இணைப்புக்கான இறுதி ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. சென்னை மாநகர எல்லையுடன் வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ள புறநகர் திட்டப் பகுதிகளை இணைப்பதற்கான செயற் குறிப்பை வீட்டுவசதி வாரியம் 1962-லும், 1970-லும் அனுப்பியது. அந்தச் செயற்குறிப்பு வந்த பிறகுதான் அதிலே 12 பேரூராட்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.